2023 ஏப்ரல் 1]
94—

குடியிருப்புகள்

***62481—திரு. கே.பி. முனுசாமி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேப்பனஹள்ளி தொகுதி, ராயக்கோட்டையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கிருஷ்ணகிரி மாவட்டம், ராயக்கோட்டையில் வீட்டு வசதி வாரியத்திற்குப் போதுமான இடம் தற்போது இல்லை. எனவே, உடனடியாக குடியிருப்புகள் கட்டுவதற்கான வாய்ப்புகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராயக்கோட்டை மற்றும் சூளகிரி பகுதிகள், தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, Tata Electronics தொழிற்சாலை இருக்கிறது. அந்த கம்பெனியிலேயே தற்சமயம் 15,000 தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அதை விரிவுபடுத்தும்போது 50,000 தொழிலாளர்கள் வரயிருக்கிறார்கள். அதைப்போல பல தொழிற்சாலைகள் அந்தப் பகுதியிலே இருக்கின்ற காரணத்தினால் இன்னும் ஓரிரு ஆண்டுகளுக்குள்ளாக 1,00,000 தொழிலாளர்கள் அந்தப் பகுதியிலே குடியேறக்கூடிய ஒரு சூழல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு–ஏற்கெனவே, தொழில் துறையின் வாயிலாக SIPCOT ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தியிருக்கிறது. அந்த நிலத்தில் ஒரு பகுதியை, அந்தத் துறையிடத்திலே கேட்டு, அந்த ஒரு பகுதியை எடுத்து இந்த தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வீடு கட்டி கொடுப்பதற்கு*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியில், அவசியம் இருந்து, கேட்புகள் அதிகமாக இருந்தால், கண்டிப்பாக அங்கே பணிகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கலாம். இதிலே இருக்கின்ற ஒரேயொரு சிக்கல் என்னவென்றால், கிருஷ்ணகிரி மாவட்டத்திலேயே நாம் develop செய்திருக்கின்ற மனைத் திட்டங்களில் ஏறத்தாழ 310–க்கும் மேற்பட்டவை விற்கப்படாமல் இருக்கின்றன; மொத்தமாக அங்கே 2,903 வீடுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, தனி வீடுகளேகூட 7,621–ல் 10 வீடுகள் விற்காமல் இருக்கின்றன. அதேபோல, வாடகை வீடுகள்கூட மொத்தம் 1,014–ல், 352 பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. அடுக்குமாடிக் குடியிருப்புகள் 1,644–ல், 142 விற்காமல் இருக்கின்றன. எனவே, இதையெல்லாம் கருத்தில் கொண்டு, அந்த இடத்திற்கு என்ன அவசியம் என்பதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கலாம்.

ஆனால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அங்கே நிறைய தொழிற்சாலைகள் வருகின்றன என்று சொன்னார்கள். நாங்கள், அதுகுறித்து மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களிடம் பேசியிருக்கிறோம். எங்கே தொழிற்சாலைகள் வருகின்றனவோ, அங்கே தொழிற்சாலைகளுக்கு நிலம் கையகப்படுத்தப்படுகின்றபோது, வீடுகளுக்காகவும் சேர்த்து கையகப்படுத்தி ஓர் ஒருங்கிணைந்த திட்டமாகச் செயல்படுத்தலாம் என்பது பற்றி மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களிடம் நாங்கள் ஆலோசித்திருக்கிறோம். ஏற்கெனவே தொழிற்சாலைக்காக எடுக்கப்பட்ட இடத்தை வீட்டு வசதிக்காக மாற்ற முடியுமா என்பது எனக்குத் தெரியவில்லை. அதுபற்றி ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கலாம்.

2023 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று பல தொழிற்சாலைகள் வந்து கொண்டிருக்கின்ற சூழலில், கிராமப் பகுதியாக இருக்கின்ற ராயக்கோட்டை மற்றும் சூளகிரி பகுதிகள் நகர்ப் பகுதிகளாக மாறிக் கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதிகளை கிராமப் பகுதிகள் என்று ஒதுக்கிவிடாமல், அவை வளர்ந்து வருகின்ற பகுதிகளாக இருக்கின்ற காரணத்தால் அதைக் கருத்திற்கொண்டு—நகரப் பகுதிகளில் கொண்டுவரக்கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புகளை—வளர்ந்து வருகின்ற இந்த இரண்டு கிராமங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே பல இடங்களில் இன்னும் வீடுகள் காலியாக இருக்கின்றன என்று கூறினார்கள். நான், தொழிற்சாலைகள் மிகுந்த பகுதிகளில் வீடுகள் வேண்டுமென்று கேட்கிறேன். ஏற்கெனவே 10 ஆண்டுகளுக்கு முன்பாகக்கூட, தொழிற்சாலை இல்லாத பகுதிகளில் வீட்டு வசதித் துறை மூலமாக இடம் எடுத்திருக்கலாம். எனவே, அந்தப் பகுதிக்குக் குடி வந்திருக்க மாட்டார்கள். ஆனால், நான் குறிப்பிடுகின்ற பகுதிகளில் ஏற்கெனவே பல தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. பல தொழிற்சாலைகளிடம் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கின்றன. அதன் வாயிலாகவும் பல தொழிலாளர்கள் இன்னும் குடிவரயிருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை மூலமாக வீடுகள் கட்டுவதற்கும், அங்கே இருக்கின்ற தொழிலாளர்கள் தங்குவதற்குரிய, நகர்ப்புறங்களில் ஏற்கெனவே இருந்த குடிசை மாற்று வாரிய வீடுகளுக்குப் பதிலாக நகர்ப்புர வளர்ச்சித் துறையின் வாயிலாகக் கட்டப்படுகின்ற அடுக்குமாடிக் கட்டடங்களை தொழிலாளர்களுக்கு ஒதுக்கக்கூடிய, வளர்ந்து கொண்டிருக்கின்ற இந்தப் பகுதிகளில் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

[*2023 ஏப்ரல் 1*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் அந்தக் கருத்தைத்தான் சொன்னேன். ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்கப்படும்போது, அந்த இடத்தில் எத்தனை தொழிற்சாலைகள் வரும், எத்தனை தொழிலாளர்கள் வருவார்கள் என்பது மற்ற துறைகளைவிட தொழில் துறைக்கு நன்றாகத் தெரியும். எனவே, அத்துறையின் மூலமாக இணைந்து,* joint *ஆக எடுத்துக்கொண்டு பணிகள் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளலாம்; இது ஒன்று.*

இரண்டாவது, ஒசூர் ஒரு பெரிய industrial centre *என்பது நம் எல்லோருக்கும் தெரியும். அங்கேயும்கூட வீடுகள் காலியாக இருக்கின்றன. அதற்குக் காரணம், எங்கே அவசியம் தேவை, எங்கே. எப்படிப்பட்ட வீடுகள் தேவை என்பதைக் கணக்கிட்டு முடிவு செய்யாத காரணத்தால்தான் இந்த நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற இடத்தில் அவசியம் இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது; ஆய்வு செய்து, அதற்கான நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படும். அதேநேரத்தில், உடனடியாக நிலத்தை ஆர்ஜிதம் செய்வது என்பது அவ்வளவு சுலபம் இல்லை. நாம்* Section *4(1)-ன்கீழ்* notice *கொடுத்தால், ஏறத்தாழ 5 ஆண்டுகள் ஆகின்றன. இதில், நில சேர்மானம் என்ற திட்டத்தைக் கொண்டு வருகிறோம். அப்படி யாராவது இதற்கு முன்வந்தால், நீங்களும் சொன்னால், அதை எடுத்துச் செய்வதற்கு நமக்கு வசதியாக இருக்கும். இன்னொன்றையும் சொல்கிறேன், நகரத்திற்குள்ளேயே அதிகமான வீடுகளைக் கட்டுவதைவிட, கிராமத்தை நோக்கி, நகர்ப்புரங்களுக்கு வெளியே வீடுகள் கட்ட வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கமாக இருக்கிறது. எனவே, அதைப் பரவலாக்க வேண்டும்; இங்கேயிருக்கின்ற நெருக்கடிகளைக் குறைக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கமாக இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் நாங்கள் பணியாற்றுகிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*